In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.11/2021 Prosecution witness P.W.9

Name: Suresh Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 29.08.2023

**(Accused is present. )**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்தலாபுரத்தில் வசிக்கிறேன். தனியார் பேருந்தில் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். 17.05.2020 ம் தேதி நான் வேலைக்கு போய்விட்டு இரவு சுமார் 7 மணியளவில் நான் ஊருக்கு வந்து கொண்டிருந்தபோது போலீசார் அங்கு நின்றிருந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன். அப்போது என்னுடன் ராம்குமார் இருந்தார். எதற்காக கையெழுத்து போட்டேன் என்பது எனக்கு தெரியாது. என் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றினார்களா என்றால் அதை நான் பார்க்கவில்லை. அன்றைய தினம் நான் இரண்டு கையெழுத்துக்கள் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது. அந்த கையெழுத்துக்கள் முறையே அதசாஆ.3 மற்றும் 4. இவ்வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, 17.05.2020 ம் தேதி 19.00 மணிக்கு நானும் எங்க ஊரைச் சேர்ந்த கோபுரம் மகன் ராம்குமாரும் முத்துலாபுரம்

காலனி தெரு, நாகன் மகன் சங்கிலி வீட்டு முன்பாக இருந்தபோது பட்டிவீரன்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் சம்பவ இடத்தை எங்கள் இருவரது முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் என்றும், பின்னர் சம்பவ இடத்தில் இருந்த இரத்தம்பட்ட மண் மற்றும் இரத்தம்படாத மண் ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் பார்வை மகசர், அத்தாட்சி ஆகியவற்றில் தானும் ராம்குமாரும் கையெழுத்து செய்தோம் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.29 17:50:03 +0530

Principal District Judge,
Dindigul.